


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (25.2.2024) தூத்துக்குடி, சூசைபாண்டியபுரத்தில் நடைபெற்ற தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் பெரு வெள்ளம் மற்றும் அதி கனமழையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், மகளிர் சுயஉதவிக் குழுவினருக்கு கடனுதவிக்கான காசோலைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், சட்டப்பேரவைத் தலைவர் மு. அப்பாவு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, சமூகநலம் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி. கீதாஜீவன், மீன்வளம் மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மற்றும் உயர்கல்வித் துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், பால்வளத் துறை அமைச்சர் த. மனோ தங்கராஜ், நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி, சட்டமன்ற உறுப்பினர்கள் சி.சண்முகையா, ஜி.வி. மார்க்கண்டேயன், ஊர்வசி செ. அமிர்தராஜ், தூத்துக்குடி மாநகராட்சி மேயர் பெ. ஜெகன், தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் கோ. லட்சுமிபதி, திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் மரு.கா.ப. கார்த்திகேயன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ரூ.188.09 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட

# அடுக்குமாடி தொழில் வளாகங்கள் மற்றும் தொழிலாளர் தங்கும் விடுதிகள்!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை,பிப்.27-

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 24.02.2024 அன்று குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் சார்ப்பில் கிண்டி மற்றும் அம்பத்தூர் தொழிற்பேட்டையில் முறையே ரூ.94.67 கோடி மற்றும் ரூ.63.95 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட அடுக்குமாடி தொழில் வளாகங்களையும், அம்பத்தூர் தொழிற்பேட்டையில் ரூ.29.47 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட தொழிலாளர்கள் தங்கும் விடுதியினையும் திறந்து வைத்தார்.

இதில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது:-

முத்தமிழ் அறிஞர் கலைஞர் குறு, சிறு நிறுவனங்களுக்காக 1970-ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி கழகத்தை துவக்கி வைத்தார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி தமிழ்நாடு சிட்கோ மூலம் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோர்கள் உடனடியாக தொழில் துவங்குவதற்காக கிண்டி மற்றும் அம்பத்தூர் தொழிற்பேட்டையில் ரூ.188.09 கோடி மதிப்பில் அடுக்குமாடி தொழில் வளாகம், தொழிலாளர் தங்கும் விடுதி இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் பெரிய தொழிற்சாலைகளுக்கு எந்த அளவிற்கு முக்கியத்துவம் அளிக்கிறார்களோ அதே அளவிற்கு குறு, சிறு நிறுவனங்களுக்கும் முக்கியத்துவம் அளிக்கிறார். தொழிற் வளர்ச்சியில் தமிழ்நாடு இந்திய அளவில் இரண்டாம் இடம் வகிக்கின்றது. தொழில் துவங்க உகந்த மாநிலங்கள் பட்டியலில் முதல் இடமும், மின்னணு பொருட்கள் ஏற்றுமதியில் முதல் இடமும் பெற்றிருக்கிறது. தமிழ்நாட்டில் உள்ள மகளிரில் 42 சதவீதப் பெண்கள் பணிக்கு செல்லும் பெண்களாக உள்ளனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வேளாண் சார்ந்த தொழில்களுடன் தொலைநோக்கு திட்டங்களான சிட்கோ, சிப்காட் போன்ற நிறுவனங்களின் மூலம் நவீன தமிழ்நாட்டை படைத்திருக்கிறார். அதன் வளர்ச்சியை தான் இன்று நாம் காண்கின்றோம். இது போன்று தொலைநோக்கு திட்டங்கள் இல்லாத காரணத்தினால் தான் வடமாநில தொழிலாளர்கள் இன்று தென் மாநிலங்களுக்கு புலன் பெயர்ந்து வந்துள்ளனர். அவர்களின் நலனையும் நம் திராவிட மாடல் அரசு பாதுகாத்து வருகின்றது.

முத்தமிழ் அறிஞர் கலைஞரைப் போலவே, தமிழக முதலமைச்சர் அவர்களும் குறு, சிறு தொழில் நிறுவனங்களின் வளர்ச்சியில் தனிக்கவனம் செலுத்தியதன் காரணமாக பல்வேறு சாதனைகளை படைந்து வருகிறார். கடந்த மாதம் நடந்த உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் MSME துறையின் சார்பாக ரூ. 63,573 கோடி முதலீடுகள் ஈர்க்கும் 5,068 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. இதன் மூலம் 2 லட்சத்து 51 ஆயிரத்திற்கு மேல் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்.

தமிழ்நாட்டில் புதிய தொழில் நுட்பங்களை ஊக்கப்படுத்த புத்தொழில் முனைவோர்களை உருவாக்க முதல்வர் அவர்களால் புத்துயிர் அளிக்கப்பட்டது Start up TN நிறுவனம் இந்திய அளவில் தர வரிசையில் கடைசி இடத்தில் இருந்த Start up தமிழ்நாடு கழக அரசு பொறுப்பேற்ற பின் கடைசி இடத்தில் இருந்து முன்னேறி 2021ல் 3ஆம் இடமான லீடர் விருதினை பெற்றது. தற்போது, ஒன்றிய அரசு வெளியிட்ட 2022ஆம் ஆண்டிற்கான தர வரிசை பட்டியலில் Start up TN நிறுவனம் இந்திய அளவில் முதல் இடம் பிடித்து சிறந்த செயற்பாட்டாளர் என்ற விருதினை பெற்றுள்ளது. கழக அரசு பொறுப்பேற்றதிலிருந்து, தமிழ்நாட்டில் அதிக எண்ணிக்கையில் StartUp நிறுவனங்களை உருவாக்க, புத்தொழில் முனைவோர்களுக்கு ஆதார நிதி வழங்கும் (TANSEED) திட்டத்தின் கீழ் இதுவரை 132 StartUp நிறுவனங்களுக்கு, ரூ.13 கோடியே 95 லட்சம் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது என தெரிவித்துக் கொள்கிறேன்.

சமுதாயத்தின் அனைத்து பிரிவுகளில் இருந்தும், தொழில்முனைவோர்கள் உருவாக வேண்டும் என்பதை இலக்காக கொண்டு முதல்வர் SC/ST StartUp நிறுவனங்களுக்கு, சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்தார்கள். இதுவரை,

30 SC/ST தொழில் முனைவோர்க்கு ரூ. 43 கோடியே 65 லட்சம் நிதி உதவியை பங்கு முதலீடாக அரசு வழங்கியுள்ளது. ஆக மொத்தம், கழக அரசு பொறுப்பேற்று இது வரை 162 StartUp நிறுவனங்களுக்கு, ரூ. 57 கோடியே 60 லட்சம் நிதியுதவி வழங்கியுள்ளது என பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். முதல்வர் SC / ST தொழில் முனைவோரை ஊக்குவிக்கும் விதமாக அண்ணல் அம்பேத்கார் தொழில் முன்னோடிகள் திட்டத்தை அறிவித்தார்கள். இத்திட்டத்தின் கீழ் இது வரை 1612 பட்டியல் இனத்தோருக்கு ரூ.187 கோடி அரசு மானியத்துடன் ரூ.580 கோடி கடன் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. சிறப்பாக செயல்பட்டு வரும் இந்த Start Up TN நிறுவனத்திற்கு இந்த நிகழ்ச்சிக்கு முன் நந்தனம் CMRL கட்டிடத்தில் 22 ஆயிரம் சதுர அடி பரப்பளவில் ரூ. 5 கோடியே 64 லட்சம் மதிப்பீட்டில் ஒரு புதிய அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது.

இன்றைய தினம் கிண்டி, அம்பத்தூர் தொழிற்பேட்டைகளில் முறையே ரூ.94.67 கோடி மற்றும் ரூ.63.95 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி தொழில் வளாகங்கள் மற்றும் தொழிலாளர்கள் தங்குவதற்காக குறைந்த மாத வாடகையில் அம்பத்தூர் தொழிற்பேட்டையில் ரூ.29.47 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தொழிலாளர்கள் தங்கும் விடுதி திறந்து வைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள 71 ஐ.டி.ஐ. கல்வி நிறுவனங்களை ரூ.2871 கோடி மதிப்பில் சென்டர் ஆப் எக்ஸலென்ஸ் ஆக தரம் உயர்த்தவும், மானா மதுரை, ஒட்டன்சத்திரம், திருத்துறைப் பூண்டி ஆகிய பகுதிகளில் ரூ.32 கோடி மதிப்பில் புதிய தொழிற்பேட்டை அமைக்க நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே, தமிழ்நாட்டில் உள்ள தொழில் முனைவோர்கள் அரசின் திட்டங்களை முழுமையாக பயன்படுத்தி முதல்வரின் 2030 -ல் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரம் என்ற இலக்கினை அடைய ஒத்துழைக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

**அமைச்சர்**

**தா.மோ.அன்பரசன் பேச்சு!**

இந்த விழாவில் தலைமையுரை ஆற்றிய குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் பேசும் போது,

“கிண்டி தொழிற்பேட்டையில் உடனடி தொழில் தொடங்கும் வகையில் தரைதளம் மற்றும் 6 தளங்களுடன், 591 முதல் 1317 சதுரஅடி அளவுகளுடன் 156 அலகுகள் கொண்ட அடுக்குமாடி தொழிற்கூட வளாகமும், அம்பத்தூர் தொழிற்பேட்டையில் தரை தளம் மற்றும் 4 தளங்களுடன், 545 முதல் 1095 சதுர அடி அளவுகளுடன் 112 அலகுகள் கொண்ட அடுக்குமாடி தொழிற்கூட வளாகம் வளாகங்கள் முறையே, சரக்கு மற்றும் பயணிகள் மின் தூக்கி வசதி, தீயணைப்பு வசதி, தண்ணீர் வசதி, பொது சிற்றுண்டியகம், பல்நோக்கு கூட்ட அரங்கம், வணிக மையம், மருந்தகம் மற்றும் ஒவ்வொரு தளத்திலும் பொதுவான ஒப்பனை அறை, போன்ற வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இதை தவிர்த்து போதுமான அளவு லாரி, கார் மற்றும் இரு சக்கர வாகனங்கள் நிறுத்த வசதிகள் செய்யப்பட்டுள்ளன.


மேலும், அம்பத்தூர் தொழிற்பேட்டையில் தரை தளம் மற்றும் 5 தளங்களுடன் சுமார் 810 தொழிலாளர்கள் தங்கும் வகையில் 125 அறைகளுடன் தொழிலாளர் தங்கும் விடுதியில் பயணிகள் மின்தூக்கியுடன், நன்கு காற்றோட்டமான அறைகள், வராண்டா, தீயணைப்பு வசதி, தண்ணீர் வசதி, ஓய்வெடுக்கும் அறை, விளையாடும் பகுதி, சலவையகம், மருந்தகம், அவசர மருத்துவ அறை, அழகு நிலையம் மற்றும் பொதுவான சமையலறை, அனைத்து தளங்களிலும் பொதுவான ஒப்பனை அறை, மற்றும் கண்காணிப்பு கேமரா உடன் கூடிய பாதுகாப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இவ்விடுதியானது தொழிற்பேட்டையில் பணிபுரியும் தொழிலாளர்கள் தாங்கள் தொழில் செய்யும் இடத்திற்கு அருகாமையிலேயே தங்க வசதியாக இருக்கும் படி அமைக்கப்பட்டுள்ளது” எனத் தெரிவித்தார்.

இவ்விழாவில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, ஏ.எம்.எம்.பிரபாகர் ராஜா, ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு.மகேஷ் குமார், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அரசு செயலாளர் திருமதி.அர்ச்சனா பட்நாயக், தமிழ்நாடு சிட்கோ நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. சோ. மதுமதி, சிட்கோ நிறுவனத்தின் பொது மேலாளர் செ.தனலிங்கம் மற்றும் மண்டல குழுத் தலைவர்கள் ஆர். துரைராஜ், பி.கே.மூர்த்தி, மாமன்ற உறுப்பினர்கள் தா.மோகன்குமார், ம.கமல், TANSTIA கிண்டி தலைவர் சி.கே.மோகன், IEMA கிண்டி தலைவர் வி.கே.கிரீஷ் பாண்டியன், AIEMA அம்பத்தூர் தலைவர் வி.அரவிந்த், CAAIIUC அம்பத்தூர் தலைவர் வி.விஜயகுமார் மற்றும் சிட்கோ அலுவலர்கள், பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை காந்திநகர் அரசு உயர்நிலைப் பள்ளியில் நடந்த ஆண்டு விழாவில், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் கவிச்சுடர். கவிதைப்பித்தன் சிறப்புரையாற்றினார். நிகழ்வில் நகர்மன்றத் தலைவர் திலகவதி செந்தில், பொதுக்குழு உறுப்பினர் இராசு. சந்தோஷ் , நகர தி,மு,க. துணைச் செயலாளர் மா.மணிவேலன், தி,க. ரெ.மு.தர்மராஜ் மாவட்ட தி,மு,க, இலக்கிய அணி துணைத் தலைவர் கவிஞர் ஆ,மரியஎட்வின், வட்டச் செயலாளர்கள் சி,மாரியப்பன், ஜெ,ரவிச்சந்திரன், அ,தியாகு. முன்னாள் நகர்மன்ற உறுப்பினர்கள் எம்,ராணி, சி.கண்ணகி, கா,ராமு, டி,எஸ்.மாணிக்கம், ஆசிரியர்கள் மாணவ, மாணவிகள், பெற்றோர்கள் பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# நம் நெஞ்சில் நிலைக்கும் நினைவிடங்கள்!



சென்னையில் வங்கக் கடற்கரையின் வெண்மணற் பரப்பில் இரண்டு நினைவிடங்கள் - ஒன்று பேரறிஞர் அண்ணா நினைவிடம், அருகில், அண்ணாவின் இதயத்தை இரவலாகப் பெற்று வாழ்ந்த அவர்தம் அன்புத் தம்பி கலைஞர் நினைவிடம். அண்ணா நினைவிடம் இப்போது புதுப்பிக்கப்பட்டுள்ளது; கலைஞர் நினைவிடம் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இரண்டு நினைவிடங்களையும், திராவிட நாயகர் - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் இன்று திறந்து வைத்து உலகத் தமிழர்களுக்கு உளமார அர்ப்பணிக்கிறார்.

அண்ணா - கலைஞர் நினைவிடங்கள் திறந்து வைக்கப்படுகின்றன. அந்த நினைவிடங்கள் நோக்கி, ஓயாமல் கரைவந்து மோதிக் கொண்டிருக்கும் வங்கக் கடல் அலைகளைப் போலே, நம் நெஞ்சத்தின் கரைகளில், அண்ணா – கலைஞர் நினைவுகள் மோதி, தங்கத்தமிழோசையை எழுப்பிக்கொண்டே இருக்கின்றன.வங்கக் கடல் வற்றிப்போனாலும், நம் நெஞ்சத்தில் கலந்திருக்கும் அந்தத் தமிழோசை, காலமெலாம் எதிரொலித்துக் கொண்டே இருக்கும். தலைமுறை தலைமுறையாக, அவ்வமுதத் தமிழோசை தமிழினத்தை அன்றாடம் தட்டி எழுப்பி, உணர்ச்சி கொள்ளவே செய்யும் !


**புதுப்பொலிவு பூத்துள்ள அண்ணா நினைவிடத்தில், புத்தகமும் கையுமாய், பேரறிஞர் அண்ணா அவர்களின் அறிவழகுச் சிலையும்; மகுடம் துறந்து, மாத்தமிழுக்கு மாணிக்கப் பரல்கள் கொண்டு மணியாரம் பூட்ட சிலப்பதிகாரக் காவியம் தந்த முத்தமிழ்ச் சீலர் இளங்கோஅடிகள், கற்கண்டுத் தமிழ்க் கவிச்சக்கரவர்த்தி கம்பர் ஆகியோர்தம் ஆற்றல் பெருக்கும் சிலைகளும்; நம் உள்ளங்களைக் கொள்ளை கொள்கின்றன.**

**புதிதாக எழுப்பப்பட்டுள்ள கலைஞர் நினைவிடத்தில், செங்கோல் பறி போனாலும் எனது எழுது கோலை யாராலும் பறிக்க முடியாது – என ஆதிக்க புரிக்கு அறைகூவல் விடுத்து, வாழ்நாளெல்லாம் எழுத்துக்களின் வெளிச்சத்திலேயே வாழ்ந்த முத்தமிழறிஞர் கலைஞரின் சிலை, தமிழ் செம்மொழியென அறிவிக்கப்பட்ட வரலாறு, கலைஞர் உலகத்தின் கலை – அரசியல் உள்ளிட்ட பன்முகத் தோற்றங்கள், கலைஞரின் தொன்மையும் நவீனமும் கலந்த ஆளுமைப் பக்கங்கள் நம் கண்வழிப் புகுந்து, கருத்தினில் கலந்து, நங்கூரம் பாய்ச்சி நிற்கின்றன.**

**“அசோகர் காலத்துக் கல்வெட்டுகளும், தூபிகளும் இல்லாமல் போயிருந்தால், அந்த மவுரியப் பேரரசனின் மாட்சியினை, நம்மால் உண்மையாகவே உணர்ந்திருக்க முடியுமா ?**

**டில்லியிலே உள்ள குதுப்மினார் கூறிடும் சரித்திரச் சான்றுகள்தான் எத்தனை ! எத்தனை !**

**ஆக்ராவில் அமைந்துள்ள ஷாஜஹானின் தாஜ்மஹால்தான் எத்தகைய எழில் கொஞ்சும் காதல் காவியத்திற்கு அழிவில்லா ஓவியக் கோவிலாக ஒளி வீசுகிறது !**



முக்கியமான சில வரலாற்று நிகழ்ச்சிகளை நினைவுறுத்தும் வடிவங்கள் சமைப்பதையும் தன் கடமையாகக் கொண்டு செயலாற்றி வருகிறது திராவிட முன்னேற்றக் கழகம்.

ஏனெனில், வரலாறு என்னும் அருமையான தங்கப் பேழைக்குத் திறவுகோலாய்த் திகழ்பவையே சிலைகள், கல்லறைகள், ஸ்தூபிகள், நெடிய தூண்கள்!” என்று “ நெஞ்சுக்கு நீதி “யில் கலைஞர் எழுதினார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், 1969ல் முதலமைச்சராகப் பொறுப்பேற்றதும், மக்கள் நலப்பணிகளிலும், திட்டங்களிலும் முழு நேரத்தையும் செலவிட்டார். அத்துடன் நின்றுவிடாமல், தன்னை உருவாக்கிய தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோர்க்கு எண்ணற்ற சிலைகளை நாடெங்கிலும் திறந்து வைத்து நன்றிக் கடன் ஆற்றினார்; தியாகிகளுக்கும், சிந்தனையாளர்களுக்கும் சிலைகள் எழுப்பி மரியாதை செலுத்துவதிலும், மணி மண்டபங்கள், நினைவு இல்லங்கள் அமைத்து வரலாற்றுக்கு வடிவம் கொடுப்பதிலும் ஈடுபாடு காட்டினார்.

**வ.உ.சிதம்பரனார் சிறையில் இழுத்த செக்கு, கோவைச் சிறையில் இருந்தது தெரிந்தவுடன், அதனைச் சென்னைக்குக் கொண்டுவந்து வைத்து, கப்பலோட்டிய தமிழனின் வீரம் செறிந்த விடுதலைப் போராட்ட வரலாற்றை இளைய தலைமுறையினர்க்கு நினைவு படுத்தினார் கலைஞர்.**

**வானம் பொழியுது, பூமி விளையுது, உனக்கேன் கிஸ்தி என வெள்ளையரைக் கேட்டு, வீரத்துடன் போராடி, இறுதியில் தூக்குமேடை ஏறி, வரலாற்றில் வாழ்கின்ற வீரபாண்டிய கட்டபொம்மன் கோட்டை; காவிரிப் பூம்பட்டினத்தில் தோரணவாயில் – எழுநிலை மாடத்துடன் கூடிய சிலப்பதிகாரக் கலைக் கூடம், சூழும் தென் கடல் ஆடும் குமரியில், இந்தியப் பூகோளத்தின் எடுப்பான அடையாளமாக அய்யன் திருவள்ளுவரின் ஆகாயத்தை முட்டும் சிலை போன்றவற்றை உருவாக்கி, வரலாற்றுடன் இலக்கியத்தையும் இணைத்து, இறவா நினைவுக்கு இன்னமுதம் படைத்தார் கலைஞர்.**

**முத்தமிழறிஞர் கலைஞர், தனது அன்பு அரசியல் ஆசான் அண்ணாவுக்கு நினைவிடம் அமைத்ததைப் போலவே, பெருந்தலைவர் காமராசருக்கு சென்னையில் நினைவிடமும் – குமரியில் மணிமண்டபமும், மூதறிஞர் இராஜாஜிக்கு நினைவிடமும் அமைத்தார்.மருதூரில் வள்ளலார்க்கும், சென்னையில் மகாகவி பாரதிக்கும், தில்லையாடியில் வள்ளி அம்மைக்கும், திருமங்கலத்தில் தியாகி விஸ்வநாத தாஸுக்கும், நாமக்கல்லில் கவிஞர் இராமலிங்கனார்க்கும் நினைவில்லங்கள் அமைத்தவர் கலைஞர்.**

**நாகர்கோவிலில் பொதுவுடைமை வீரர் ஜீவாவுக்கும், நெற்கட்டும் செவல் கிராமத்தில் விடுதலைப் போராட்ட வீரர் பூலித் தேவருக்கும், உடுமலையில் பகுத்தறிவுக் கவிராயர் நாராயண கவிக்கும், பட்டுக்கோட்டையில் கவிஞர்கல்யாணசுந்தரனார்க்கும், சென்னையில் கண்ணியமிகு காயிதேமில்லத்துக்கும், தும்பப்பட்டியில் தியாகி கக்கனார்க்கும் என எண்ணற்ற மணி மண்டபங்கள் உருவாக்கியவர் கலைஞர்.**

இப்படி கலைஞர் அனைத்துச் சான்றோரின் நினைவுகளையும் போற்றி நிரந்தரப்படுத்தினார்.பேரறிஞர் அண்ணா அவர்களின் அரசு, இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டை 1968 - ஆம் ஆண்டு நடத்தியது. அந்த மாநாடு பற்றி, கலைஞரின் கன்னித் தமிழ் வர்ணனையுடன் வெளியிடப்பட்ட குறும்படத்தில்; வள்ளுவர், அவ்வையார், கம்பர், ஜி.யு.போப், கால்டுவெல், பாரதியார், பாரதிதாசனார், வ.உ.சி.,வீரமாமுனிவர்,கண்ணகி ஆகிய “ பத்து சிலைகள் வைத்ததனால் அண்ணன் தமிழ் மீது வைத்துள்ள பற்றுதலை நாடறிய அண்ணனுக்கோர் சிலை” என்று காந்தக் குரலில் எடுத்துரைத்தார் கலைஞர்.

**திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூலவரான அண்ணா அவர்களுக்கு வங்கக் கடலோரம் நினைவிடம் கண்டார் கலைஞர். அப்படிப்பட்ட கலைஞருக்கு, சட்டப் போராட்டம் நடத்தி அதில் வென்று,அண்ணா நினைவிடம் அருகிலேயே நினைவிடம் கண்டவர் நமது திராவிடப் போராளி மு.க.ஸ்டாலின்.**

**திராவிட இயக்கத்தின் இருபெரும் ஆளுமைகளின் நினைவிடங்களை, திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று திறந்து வைக்கிறார்.அந்த நினைவிடங்கள் கலங்கரை விளக்கங்களாய், காலம் காலமாக நிலைத்து நின்று, உலகத் தமிழினத்தை உய்விக்க வழி காட்டி உயர்த்தும் என்பது உறுதி!**

**கி.இராஜமாணிக்கம்**